

சென்னை, திருவல்லிக்கேணி, வி.பி. இராமன் சாலையில், நேற்று (03.05.2023) நடைபெற்ற நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புறநகர் உட்பட 28 சட்ட மன்ற தொகுதிகளில் ரூ.295.97 கோடி மதிப்பில் புதியதாக அமைக்கப்பட்ட 2,042 வளைய சுற்றுத்தர அமைப்புக்களை (RMU) பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, இயக்குநர்/ பகிர்மானம் மா.சிவலிங்கராஜன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை மற்றும் புறநகர் உட்பட 28 தொகுதிகளில்

# ரூ.295.97 கோடியில் 2024 வளைய சுற்றுத்தர அமைப்புகள்!

## அமைச்சர் வி.செந்தில் பாலாஜி முன்னிலையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை,மே.4-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று சென்னை, சேப்பாக்கம்திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வி.பி. ராமன் சாலையில் புதிதாக நிறுவப்பட்டுள்ள வளைய சுற்றுத்தர அமைப்பினை (Ring Main Unit) திறந்து வைத்தார். அத்துடன், சென்னை மாநகர் மற்றும் புறநகர் உட்பட 28 சட்டமன்ற தொகுதிகளில் ரூ.295.97 கோடி செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 2,042 வளைய சுற்றுத்தர அமைப்புகள் (Ring Main Unit) நிறுவும் பணிகள் நிறைவு பெற்றதை தொடர்ந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் வி செந்தில் பாலாஜி முன்னிலையில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக நேற்று (03.05.2023) திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், ராஜேஷ் லக்கானி, இயக்குநர்/ பகிர்மானம் மா.சிவலிங்கராஜன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே. சிற்றரசு மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள அண்ணா நகர், அம்பத்தூர், ஆவடி, சேப்பாக்கம், எழும்பூர், துறைமுகம், கொளத்தூர், மாதவரம், மதுரவாயல், மைலாப்பூர், பெரம்பூர், ஆர்.கே.நகர், ராயபுரம், சைதாப்பேட்டை, தியாகராயநகர், வி.க.நகர், திருவெற்றியூர், ஆயிரம்விளக்கு, வில்லிவாக்கம், விருகம்பாக்கும், ஆலந்துர், பூவிருந்தவல்லி, வேளச்சேரி, சோழிங்கநல்லூர், கும்மிடிப்பூண்டி, ஸ்ரீபெரும்புதூர், பல்லாவரம், தாம்பரம் ஆகிய 28 சட்டமன்ற தொகுதிகளில் மொத்தம் ரூ.787 கோடி மதிப்பீட்டில் விநியோக மின்மாற்றிகள் மற்றும் மின் வழிப் பாதைகளுக்கு புதிய 5,433 வளைய சுற்றுத்தர அமைப்பு கருவிகள் (RMU) நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவற்றுள், ஏற்கனவே 2,704 வளைய சுற்றுத்தர அமைப்பு கருவிகள் (RMU) ரூ.391.94 கோடி செலவில் நிறுவப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டன. மேலும், 2,042 வளைய சுற்றுத்தர அமைப்பு கருவிகள் (RMU) ரூ.295.97 கோடி செலவில் நிறுவும் பணிகள் அனைத்தும் முடிவுற்று இன்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இந்த வளைய சுற்றுத்தர கருவி அமைப்பதன் மூலம் மழைக்காலங்களில் ஏற்படும் விபத்தினை முற்றிலும் தவிர்க்க முடிவதோடு, ஒவ்வொரு வளைய சுற்றுத்தர கருவியும் குறைந்த பட்சம் இரு மின்வழிப் பாதைகளுடன் இணைக்கப்பட்டிருப்பதால், ஏதேனும் ஒரு மின்பாதையில் பழுது ஏற்பட்டாலும் மற்றொரு மின் வழிப் பாதையின் மூலம் உடனடியாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க முடியும். இதனால், பொதுமக்களுக்கு மின்தடையினால் ஏற்படும் அசௌகரியங்கள் வெகுவாக குறையும். மேலும், மின் வளைய சுற்றுத்தர அமைப்பு கருவிகள் அனைத்தும் SCADA சிஸ்டம் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டிருப்பதால் தலைமையிடத்தில் இருந்தே இந்த கருவிகளை இயக்க முடிவதால், மின்சாரம் எடுத்துச் செல்லும் கேபிள்களில் பழுது ஏற்பட்டாலும் கூட அதனை உடனே கண்டறிந்து துரிதமாக சரி செய்ய முடியும்.

வளைய சுற்றுத்தர கருவியினை துவக்கி வைத்ததன் தொடர்ச்சியாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதவி செயற்பொறியாளர்/இராயப்பேட்டை, உதவிப் பொறியாளர்/ திருவல்லிக்கேணி, உதவிப் பொறியாளர்/, ஐஸ் ஹவுஸ் மற்றும் மின் தடை நீக்கும் மையம்/இராயப்பேட்டை ஆகிய அலுவலகங்கள் தற்காலிகமாக செயல்படுவதற்காக புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டடத்தை திறந்து வைத்தார்.

### மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு ரூ.1.25 கோடி -

# தருமபுரி மாவட்டத்திற்கு ரூ.107.34 கோடி நிதி ஒதுக்கல்!

## டி.என்.வி.எஸ்.செந்தில்குமார் எம்.பி. வலியுறுத்தல் - ஒன்றிய அமைச்சகம் ஒப்புதல்!

தருமபுரி, மே 4-

தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினரும் சுகாதாரம் மற்றும் குடும்ப நல நிலைக் குழு உறுப்பினருமான டி.என்.வி. எஸ் செந்தில்குமார் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததன் விளைவாக ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் பிரதான் மந்திரி ஆயிஷ்மான் பாரத் சுகாதார உள் கட்டமைப்பு/ 15 வது மானியக் குழு/தேசிய சுகாதாரப் பணிகளை திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டத்திற்கு ரூ.107 கோடி 34 லட்சம் மற்றும் தர்மபுரி நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மேட்டூர் அரசு மாவட்ட மருத்துவமனையில் அதிநவீன மேம்பட்ட ஆய்வகம் தொடங்க 1.25 கோடி ரூபாயை ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் ஒதுக்கி ஒப்புதல் அளித்துள்ளது.


தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினரும் சுகாதாரம் மற்றும் குடும்ப நல உறுப்பினருமான டி.என்.வி.செந்தில் குமார் தருமபுரி பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட தர்மபுரி அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரியில் அவசர பராமரிப்பு பிரிவு மற்றும் மேட்டூர் அரசு மருத்துவமனையில் அதிநவீன மேம்பட்ட ஆய்வகம் தொடங்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்ததன் விளைவாக தற்பொழுது அதை ஏற்று ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் பிரதான் மந்திரி ஆயுஷ்மான் பாரத் சுகாதார உள்கட்டமைப்பு /15 வது மானியக் குழு/ தேசிய சுகாதாரப் பணிகள் திட்டத்தின் கீழ் தர்மபுரி மாவட்டத்திற்கு ரூ.107 கோடி 34 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது அதில் தர்மபுரி அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரியில் உள்ள அவசர பராமரிப்பு பிரிவிற்கு 23 கோடியே 75 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பென்னாகரம் தொகுதியில் உள்ள தாய் சேய் நலன் மையத்திற்கு



12 கோடி ரூபாயும் தர்மபுரி நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மேட்டூர் அரசு மாவட்ட மருத்துவமனையில் மேம்பட்ட ஆய்வகம் தொடங்க ரூபாய் 1.25 கோடி ரூபாய் ஒதுக்கி பணிகள் தொடங்கும் நிலையில் உள்ளது.

தர்மபுரி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட தர்மபுரி அரசு மருத்துவமனை மருத்துவ கல்லூரியில் உள்ள அவசர பராமரிப்பு பிரிவு, பென்னாகரம் தொகுதிக்குட்பட்ட மருத்துவமனையில் தாய் சேய் நலன் மையம் மற்றும் தர்மபுரி நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மேட்டூர் மாவட்ட அரசு மருத்துவமனையில் அதிநவீன ஆய்வகம் தொடங்குவது மூலம் மாவட்ட மருத்துவமனைகளில் உறுதியான சிகிச்சை அளிக்கவும் குறிப்பாக தீவிர நோய்களுக்கு சிகிச்சை அளிக்கவும், அது மட்டுமல்லாமல் நோய் தொற்று காலங்களில் பொது மக்களுக்கு சிகிச்சை அளிக்க மிகவும் பயனுள்ளதாக அமையும்.

எனவே இந்த திட்டங்களை தருமபுரி நாடாளுமன்றத் தொகுதி மக்களுக்கு கொண்டு வந்ததன் மூலம் தர்மபுரி மாவட்டம் மருத்துவத் துறையில் அடுத்த கட்டத்திற்கு செல்லும் என்பது குறிப்பிடத்தக்கது.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு திருவான்மியூர் மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் நேற்று (03.05.2023) உபயதாரர் ஆர்.கிரிதரன் சார்பில் மாதம் ஒருமுறை திருக்கோயிலுக்கு வருகை தரும் அனைத்து பக்தர்களுக்கும் காலை மற்றும் மாலை சிற்றுண்டி வழங்கும் நிகழ்வை தொடங்கி வைத்தார். உடன் சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, திருக்கோயில் செயல் அலுவலர் சக்தி மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

# சூடானிலிருந்து மேலும் 231 பேர் இந்தியா திரும்பினர்!

புதுடெல்லி, மே.4

சூடான் நாட்டிலுள்ள இந்தியர்களை மீட்கும் நடவடிக்கை 'ஆபரேஷன் காவிரி' என்ற பெயரில் நடைபெற்று வருகிறது. இந்திய கடற்படையின் போர்க்கப்பல் மற்றும் விமானப்படை விமானங்கள் மூலம் இந்தியர்கள் நாடு திரும்பி வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று சவுதி அரேபியாவின் ஜெட்டா நகரில் இருந்து சிறப்பு விமானம் மூலமாக மேலும் 231 பேர் நேற்று அகமதாபாத் அழைத்து வரப்பட்டனர். இவர்களில் 208 பேர் குஜராத்தை சேர்ந்தவர்கள். 13 பேர் பஞ்சாப் மற்றும் 10 பேர் ராஜஸ்தானை சேர்ந்தவர்கள்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (03.05.2023) தலைமைச் செயலகத்தில், ஒடிசா மாநிலம், ரூர்கெலாவில் நடைபெற உள்ள 13வது ஹாக்கி இந்தியா நேஷனல் சாம்பியன்ஷிப் ஆண்கள் மற்றும் பெண்கள் சப்ஜுனியர் பிரிவு போட்டியில் பங்குபெறும் தமிழக வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு ரூபாய். 40 இலட்சம் மதிப்பிலான உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் ஹாக்கி யூனிட் ஆப், தமிழ்நாடு தலைவர் சேகர் ஜே.மனோகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

### சேலத்தில் - அமைச்சர் கே.என்.நேரு தலைமையில்

# கழக விளையாட்டு மேம்பாட்டு அணிக் கூட்டம்!

## விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. அறிவிப்பு!

சென்னை, மே.4-

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் முதல் ஆலோசனைக் கூட்டம் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்களது தலைமையில் சேலம் மாநகரில் நடைபெறவிருக்கின்றது என கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதிமாறன், எம்.பி., அறிவித்துள்ளார்.

அதன் விபரம் வருமாறு:



கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் முதல் ஆலோசனைக் கூட்டம் வருகின்ற மே 7, 2023, ஞாயிறு அன்று மாலை 3.00 மணியளவில் சேலம் புதிய பேருந்து நிலையம் எதிரில் உள்ள கலைஞர் மாளிகையில், கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்களது தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் இரா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ., சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் மற்றும் சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை தமிழ்நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடுவது குறித்தும், அணியின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தை நடத்துவது குறித்தும், ஒன்றிய நகர மற்றும் பேரூர்க் கழக அமைப்பாளர்களை நியமிப்பது குறித்தும் விவாதிக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

### காஞ்சி வடக்கு மாவட்டம் - கண்டோன்மெண்ட் பல்லாவரத்தில் மே - 7 அன்று

# முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றும் பொதுக்கூட்டத்தில் பல்லாயிரவர் பங்கேற்பு!

## மாவட்ட செயற்குழு கூட்டத்தில் முடிவு! அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

சென்னை, மே.4-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் கண்டோன்மெண்ட் பல்லாவரத்தில் மே7 ஆம் தேதி நடைபெறும் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒட்டுமொத்த கழகத் தோழர்களும் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு பங்கேற்பது என மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது என காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக செயற்குழு உறுப்பினர்கள் அவசர கூட்டம் பல்லாவரம், 200 அடி ரேடியல்சாலையில் அமைந்துள்ள சுரபி மகால் திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச்செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், தலைமை தீர்மான குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வீ.தமிழ் மணி, எஸ்.ஆர்.எல். இதயவர்மன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச்செழியன், க. அன்புச்செல்வன், ஆதிமாறன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், செங்கை மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ், தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி,

பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், எஸ்.சேகர், த.ஜெயகுமார், வே.கருணாநிதி, ஏ. கே.கருணாகரன், இ.எஸ். பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ், மாடம்பாக்கம் நடராஜன்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம். சேகர், வி.எஸ்.ஆராமுதன், ஏ.வந்தேமாதரம், மூவரசம்பட்டு ரவி, ஆப்பூர் பி.சந்தானம், நகரச் செயலாளர்கள் எஸ்.நரேந்திரன், டி.பாபு, ஜெ.சண்முகம், எம்.கே.டி.கார்த்திக், எஸ். ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ், ஆர்.சதீஷ்குமார்,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், ஆர். எஸ்.சங்கர், க.தேவேந்திரன், மூவரசம்பட்டு சதீஷ்,கே.எத்திராஜ், எம். செல்வகுமார், ம.கணேஷ் பாபு, செ.அருள்தேவி,



இரா.பாஸ்கரன், மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு, தொ.மு.ச.பேரவைச் செயலாளர் பொன்னுராம், மாநில சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் சாய் ஜெயகாந்த் பாரதி,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், செந்தில் தேவராஜ், ஜாகீர் உசேன், ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டம், தி.க. பாஸ்கரன், எஸ்.ஆல்பர்ட், ஆர். கோவிந்தன், எம்.எஸ்.கதிரவன், வி.ரவிச்சந்திரன், ஜான் தினகரன், தாம்பரம் மாநகரக் கழக நிர்வாகிகள் அனகை நரேஷ் கண்ணா, சேலையூர் சதாசிவம், செம்பாக்கம் கண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முடிவில் கூட்ட தீர்மானங்களை விளக்கி மாவட்டச் செயலாளர் தா. மோ.அன்பரசன் உரையாற்றினார். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு :

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வருகிற 7.5.2023 ஞாயிற்றுக் கிழமை மாலை 6.00 மணியளவில் கண்டோன்மெண்ட் பல்லாவரம் ராஜேந்திர பிரசாத் சாலை தெரேசா பள்ளி அருகில் நடைபெறும் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனைவிளக்க மாபெரும் பொதுக் கூட்டத்தில் மக்கள் வியந்து பாராட்டும் வகையில் ஈராண்டில் ஈடில்லா சாதனைகள் படைத்து நல்லாட்சி நடத்தி வரும் மக்களின் முதல்வர் நாம் நாளும் உயிராய் போற்றி வணங்கும், நம் நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர் தளபதி அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர்களில் அடங்கியுள்ள வட்ட கிளைக் கழகங்களில் இருந்து கழக நிர்வாகிகள் கழகத் தோழர்கள் அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து கண்டோன்மெண்ட் பல்லாவரத்தில் நடைபெறும் இம் மாபெரும் பொதுக் கூட்டத்தில் பங்கேற்று இது வரை இது போன்ற பொதுக் கூட்டம் நடந்தது இல்லை என்று மாவட்டக் கழக வரலாற்றில் புதிய சாதனையை படைத்திடும் வகையில் வருகிற 7ஆம் தேதி மாலை 5 மணிக்கெல்லாம் அலைகடலென திரண்டு வந்து பங்கேற்பது என காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஏகமனதாக முடிவெடுக்கிறது.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறினார்.





நேற்று (3.5.2023) சென்னை தலைமைச் செயலகத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை கூட்டரங்கில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2023–24ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்த திட்டமான சென்னை தீவுத்திடலில் 30 ஏக்கர் நிலப்பரப்பில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் ரூ.50 கோடி செலவில் நவீன நகர்புற வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாக கட்டிட வடிவமைப்பாளர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, சுற்றுலா, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர்.பி.சந்தர மோகன், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர், சந்தீப் நந்தூரி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் செயலாளர் திருமதி.மு.விஜயலட்சுமி, தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி மற்றும் துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (3.5.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் – தலைவர் முரளி என். இராமசாமி, செயலாளர்கள் எஸ். கதிரேசன் மற்றும் ஆர். ராதாகிருஷ்ணன், துணைத் தலைவர் ஜி.கே.எம்.தமிழ்குமரன், இணைச் செயலாளர் எஸ். சௌந்தரபாண்டியன், செயற்குழு உறுப்பினர்கள் மாதேஷ், சுபாஷ் சந்திரபோஸ், விஜயமுரளி ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சட்டமன்ற உறுப்பினர் எஸ். அம்பேத்குமார் ஆகியோர் உள்ளனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (03.05.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், தூத்துக்குடி மாவட்டம் புதூர்/விளாத்திகுளம் ஒன்றியங்களிலுள்ள 95 கிராம ஊராட்சிகளில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டமான HCL (Samuday)–ஐ செயல்படுத்த தமிழ்நாடு அரசு மற்றும் HCL அறக்கட்டளை இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா மற்றும் HCL அறக்கட்டளையின் திட்ட இயக்குநர் அலோக் வர்மா ஆகியோர் கையெழுத்திட்டனர். இந்நிகழ்வில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆணையர் மரு. தாரேஸ் அகமது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சிறப்புச் செயலாளர் முனைவர் மு.கருணாகரன், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. பா. பிரியங்கா பங்கஜம், கூடுதல் இயக்குநர் திருமதி. க. முத்து மீனாள், HCL நிர்வாகக் குழு உறுப்பினர் ஷிகர் மல்ஹோத்ரா, HCL அறக்கட்டளையின் துணைத் தலைவர் டாக்டர். நிதி புந்திர், குழு மேலாளர் பிரிஜோ தாருக், எம். விஸ்வலிங்கம், வைபவ் சவுகான் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தந்தை பெரியாரின் லட்சியங்களை நெஞ்சில் ஏந்துவோம்! சமத்துவ - சமதர்ம தமிழ்நாட்டை உருவாக்க உறுதியேற்போம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை! ... முதல் பக்கத் தொடர்ச்சி

**அதற்கு அண்ணா இப்படிக் கூறினார், “இந்த மாலைகள், சால்வைகள், வாழ்த்துச் செய்திகள் எல்லாம் “முதலமைச்சர்” அண்ணாவுக்குத்தான் அனுப்பப்படுகின்றன. ஆனால், ஒரேயொரு வாழ்த்துச் செய்தி மட்டுமே தனிப்பட்ட அண்ணாதுரைக்கான ஒன்றாக அனுப்பப் பட்டுள்ளது. அந்த ஒரு வாழ்த்துச் செய்தியை அனுப்பியவர் தந்தை பெரியார்” என்று அண்ணா கூறினார். இதன் மூலம் பெரியார் மீது தனக்கிருந்த அன்பை அண்ணா வெளிப்படுத்தினார்.**

இன்றைக்கு அமைச்சராக நான் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறேன். என்னை பலர் சந்திக்கின்றனர். ஆனால், இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறேன் என்றால், இதில் நான் அமைச்சராக மட்டுமே பங்கேற்கிறேன் என்று அர்த்தமில்லை. உங்களில் ஒருவனாக, நமது திராவிடக் கொள்கையில் பிடிப்புள்ளவனாக , பகுத்தறிவாளனாகவே பங்கேற்கிறேன். நீங்களும் என்னை அந்த வகையில்தான் இங்கு அழைத்திருக்கிறீர்கள்.

இந்த நேரத்தில் இன்னொரு விஷயத்தையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். திராவிடர் விடுதலை கழகத்தின் தந்தை பெரியார் சிலை மற்றும் பெரியார் படிப்பகம் என்னுடைய சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் உள்ள வி.எம். தெருவில்தான் அமைந்துள்ளது. ஒவ்வொரு முறையும் நான் தொகுதிக்கு செல்கிற போது, நான் அங்குள்ள தந்தை பெரியாரின் சிலையை வணங்கிவிட்டுதான் செல்கிறேன்.

**தலைப்பிற்குள் இரண்டு செய்திகள்!**

‘இது தமிழ்நாடு!’... இந்த மாநாட்டிற்கு இப்படியொரு தலைப்பினை தேர்வு செய்தவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த தலைப்பிற்குள் இரண்டு செய்திகள் உள்ளடங்கி இருக்கிறது. ஒன்று, ‘இது தமிழ்நாடு’, இதன் உரிமைகளை காப்பது நமது கடமை என்று உரக்கச் சொல்வது. மற்றொன்று, ‘இது தமிழ்நாடு’, உங்கள் மிரட்டலுக்கு எல்லாம் நாங்கள் அஞ்சமாட்டோம் என்று பாசிச சங்கிகளை எச்சரிப்பது. இந்த இரண்டுக்காகவும்தான் நாம் இங்கே கூடியிருக்கிறோம்.

நம்முடைய எதிரிகள் கலைஞரைக் கொச்சைப்படுத்த வேண்டும் என்பதற்காகவே ஒரு பொய்யை சொல்வார்கள். அதாவது, கலைஞர் ரயில் ஏறி நேராக சென்னைக்கு சென்று இறங்கினார் என்பார்கள். ஆனால், உண்மையில் கலைஞர் திருவாரூரில் இருந்து நேராக சென்னைக்குச் செல்லவில்லை. அவர் இந்த சேலத்திற்கு வந்து, பின் கோவைக்கு சென்று, ஈரோட்டுக்கு சென்று தந்தை பெரியாரை சந்தித்து அங்கே குடிஅரசு இதழில் பணியாற்றிவிட்டு அதற்குப்பின்னர்தான், அவர் சென்னைக்குச் சென்றார்.

**ஈரோட்டு மக்களுக்கு நன்றி!**

அதேபோல, இன்றைக்கு கலைஞரின் பேரனான நான் ஈரோட்டுக்குச் சென்று பெரியாரின் பேரன் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் அவர்களை வெற்றி பெறச் செய்ததற்காக ஈரோட்டு மக்களுக்கு நன்றி சொல்லிவிட்டு, அப்படியே திருச்சிக்குச் சென்று முதலமைச்சர் அவர்களுடைய புகைப்படக் கண்காட்சி நிறைவு விழாவில் கலந்து கொண்டு, பின்னர் இந்த சேலம் மண்ணிற்கு வந்திருக்கிறேன்.

கலைஞர் இளமைக் காலத்தில் உலாவிய சேலம் மண்ணில் இந்த மாநாடு நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் ஒரு வித்தியாசம். அப்போது நமது மாநிலத்திற்கு பெயர் சென்னை மாகாணம். ஆனால் கலைஞரின் பேரனின் காலத்தில் இதற்கு பெயர் தமிழ்நாடு! அதேபோல், நம்முடைய பேரன், பேத்திகள் காலத்திலும் இது தமிழ்நாடாகவே நிலைத்திருக்க வேண்டும், நீடிக்க வேண்டும் என்றால் இதுபோன்ற மாநாடுகள் நிறைய நடக்க வேண்டும்.

இந்த சேலத்தில் இருந்த மாடர்ன் தியேட்டர்ஸில் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பல திரைப்படங்களுக்கு திரைக்கதை, வசனம் எழுதினார்கள்.

கலைஞர் அவர்கள் மார்டன் தியேட்டர்ஸில் பணியாற்றிய போது நடைபெற்ற ஒரு சம்பவத்தை ஒரு பகுத்தறிவாளனாக நினைவுகூர்வதில் மகிழ்ச்சி கொள்கிறேன். இதை கலைஞர் அவர்களே ‘நெஞ்சுக்கு நீதி’யிலும் எழுதியுள்ளார்கள்.

**1949-ல் மாடர்ன் தியேட்டர்ஸ் உரிமையாளர்கள் ‘மாயாவதி’ என்று ஒரு படத்தை எடுக்கிறார்கள். ஆனால், அந்தப்படம் சரியாக போகவில்லை. அதனால் மாடர்ன் தியேட்டர்ஸிற்கு பெரிய நஷ்டம்.**

**எனவே, கலைஞர் அவர்களின் கதை வசனத்தில் அடுத்து ஒரு படத்தை எடுக்க வேண்டும் என்று மாடர்ன் தியேட்டர்ஸ் உரிமையாளர்கள் முடிவு செய்கிறார்கள்.**

> **சமூக சமத்துவத்தை நோக்கி இன்னும் நாம் செல்ல வேண்டிய தூரம் நிறைய இருக்கிறது என்பது உண்மை தான். ஆனால், அசைக்க முடியாததாக இருந்த ஜாதி சமூக அமைப்பை பெரியார் அசைத்துக் காட்டினார் என்பதையும் யாரும் மறுக்க முடியாது.**

**கலைஞர் அவர்களும் அந்தப் படத்துக்கு கதை - வசனம் எழுதிக் கொடுத்து படம் தயாராகும் நிலையில் இருக்கிறது. அப்போது, படப்பிடிப்பை தொடங்குவதற்கான தேதியை முடிவு செய்ய ஒரு ஜோதிடரை மாடர்ன் தியேட்டர்ஸ் உரிமையாளர்கள் வரவழைக்கிறார்கள்.**

**அந்த ஜோதிடர், நம்முடைய முத்தமிழறிஞரிடம் சென்று “நான்தான் உங்கப்படத்துக்கான படப்பிடிப்பு தேதியை குறிக்க இருக்கேன்” என பெருமைப் பொங்க கூறுகிறார். கலைஞர் அவர்களோ ஒரு நக்கலான புன்னகையுடன், “நீங்க தான் மாயாவதி படத்துக்கு நாள் குறிச்சீங்களா” என்று கேட்க, “ஆமாம், நாந்தாங்க ஐயா” என அசடு வழிய சிரித்திருக்கிறார் அந்த ஜோதிடர்.**

**அப்படி அன்றைக்கு நம்முடைய கலைஞர் அவர்கள் கதை வசனம் எழுதிய அந்தப்படம் மிகப்பெரிய வெற்றி பெற்றது. அந்தப்படத்தின் பெயர் மந்திரிகுமாரி.**

**ஆரூடத்தை பொய்யாக்கி வென்ற முதல்வர்!**

அதேபோல், இன்றைக்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பற்றி பல ஆரூடங்களைச் சொன்னார்கள். கட்டம் சரியில்லை, ஜாதகத்தில் அமைப்பில்லை என்றார்கள். முதலமைச்சர் ஆக முடியாது என்றெல்லாம் சொன்னார்கள்.

ஆனால், அவற்றை பொய்யாக்கி தனது உழைப்பால் மட்டுமே வென்று காட்டி நாடு போற்றும் திராவிட மாடல் அரசை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நடத்தி வருகிறார்கள். அண்மையில், சேலம் வந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதே மாடர்ன் தியேட்டர்ஸ் வளாகத்தின் முன்பு புகைப்படமும் எடுத்துக் கொண்டார்கள்.

திராவிடர் விடுதலைக் கழகம் மாதிரி தேர்தல் அரசியலில் ஈடுபடாத சமுதாய இயக்கத்தினை நோக்கி இவ்வளவு இளைஞர்கள் வந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது எனக்கு வியப்பாகவும் பெருமையாகவும் இருக்கிறது.

**துறவிக்கும் மேலானவர்கள்!**

“என்னுடைய தொண்டர்கள் துறவிக்கும் மேலானவர்கள்” என்று நம்முடைய பெரியார் ஒருமுறை சொன்னார். அதாவது, துறவிக்குக் கூட இறந்த பிறகு சொர்க்கத்துக்கு போய் விடலாம் என்ற ஆசை இருக்கும், அப்படி ஒரு நம்பிக்கை இருக்கும்.

ஆனால், பெரியாரின் தொண்டர்களுக்கு அந்த சொர்க்கத்தின் மீது கூட நம்பிக்கை கிடையாது. அதனால்தான், தன்னுடைய தொண்டர்களை துறவிக்கும் மேலானவர்கள் என்று சொன்னார் பெரியார்.

அப்படிப்பட்ட, துறவிக்கும் மேலான தூயத் தொண்டர்கள் அதுவும் இளைஞர்கள் ஏராளம் இங்கே இருப்பதை பார்ப்பது பெருமையாக இருக்கிறது.

**கொள்கை எதிரிகள்!**

இது தமிழ்நாடு என்று ஏன் சொல்கிறோம்? இந்திய ஒன்றியத்தில் எத்தனையோ மாநிலங்கள் உள்ளன. ஆனால், மற்ற எந்த மாநிலத்தையும் விட நம்முடைய மாநிலத்திற்கு அப்படி என்ன சிறப்பு என்றால், மற்ற மாநிலங்களில் இருக்கிற கட்சிகளுக்கு எல்லாம் ஒன்றியத்தை ஆளுகின்ற பாசிஸ்ட்டுகள் வெறும் அரசியல் எதிரிகள், ஆனால் தமிழ்நாட்டிற்கு மட்டும் தான் அவர்கள் கொள்கை எதிரிகள் ஆவர்.

எவ்வளவோ முயன்று பார்க்கிறார்கள், என்னென்னவோ வியூகங்களை மாற்றிப் பார்க்கிறார்கள், எவ்வளவோ செலவு செய்துப் பார்க்கிறார்கள், மாநிலத் தலைவர்களையும் மாற்றி மாற்றிப் பார்க்கிறார்கள். ஆனாலும் அவர்களால் தமிழ்நாட்டிற்குள் தடம்பதிக்க முடியவில்லை.

**தந்தை பெரியார் என்ற தடுப்புச் சுவர்!**

அவர்களின் கண்களுக்கு தெரியாத ஒரு தடுப்புச் சுவர் தமிழ்நாட்டைப் பாதுகாக்கிறது. அந்தச் சுவற்றிலே மோதி மோதிதான் எதிரிகள் மூக்குடைப்பட்டு போகிறார்கள். அந்த தடுப்புச் சுவருக்கு பெயர்தான் தந்தை பெரியார்.






அதனால்தான் நான் சட்டப்பேரவையில் பேசும் போது கூட, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரை நம்முடைய பயிற்சியாளர்கள் (Coaches) என்று நான் கூறினேன்.

இதில், தலைமை பயிற்சியாளர் யார் என்றால் அது நம்முடைய தந்தை பெரியார் அவர்கள்தான். தந்தை பெரியார் என்ன பெரிதாக சாதித்துவிட்டார் என்று சிலர் கேட்கிறார்கள். நன்றாக யோசித்துப் பாருங்கள். தந்தை பெரியார் அவருடைய இயக்கத்தை இந்த மண்ணில் ஆரம்பித்தபோது, தமிழ்நாட்டில் பெரும்பாலான மக்களின் பெயரோடு சேர்ந்து அவர்களின் ஜாதிப் பெயரும் இருந்தது.

அந்த காலத்தில், சீனிவாச அய்யங்கார், சத்தியமூர்த்தி ஐயர், கல்யாண சுந்தரம் முதலியார், வரதராசுலு நாயுடு… இப்படித்தான் பெயர்கள் இருந்தன. ஆனால், 1973-ல், தந்தை பெரியார் மறையும் போது, தமிழ்நாட்டில் யாருடைய பெயருக்குப் பின்னாலும் ஜாதிப் பெயர் போடுவதில்லை. இது எவ்வளவு பெரிய சாதனை!

இந்தியாவில் இருக்கிற எந்த மாநிலத்தை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். ஜாதிப் பெயரைப் போட்டுக்கொள்ளாத மக்கள் இருப்பது தமிழ்நாட்டில் மட்டும்தான். அதற்கு மூலக் காரணம் தந்தை பெரியார் தான். இதனை தமிழ்நாட்டின் அடையாளமாக்கியவர் தந்தை பெரியார்.

**ஜாதிய அமைப்பை அசைத்துக் காட்டியவர்!**

சமூக சமத்துவத்தை நோக்கி இன்னும் நாம் செல்ல வேண்டிய தூரம் நிறைய இருக்கிறது என்பது உண்மை தான். ஆனால், அசைக்க முடியாததாக இருந்த ஜாதி சமூக அமைப்பை பெரியார் அசைத்துக் காட்டினார் என்பதையும் யாரும் மறுக்க முடியாது.

சேலத்துக்கு பக்கத்திலே இருக்கக் கூடிய ஈரோட்டிலே பிறந்த தந்தை பெரியார் அவர்கள்தான் தமிழர்களுக்கு தன்மான உணர்வை ஊட்டினார். முதுகெலும்பு வளைந்து நின்ற நம் மக்களை நிமிர்ந்து நிற்க வைத்தார்.

ஆனால், கொடுமை என்னவென்றால் இந்த சேலத்தைச் சேர்ந்த ஒருவர் பதவி பெற வேண்டும் என்பதற்காக முதுகெலும்பு இருப்பதையே மறந்து டேபிளுக்கு அடியில் போன காட்சியையெல்லாம் நாம் பார்த்தோம். அதுகூட பரவாயில்லை, அது அவரின் சுயநலம்.

ஆனால், டெல்லியின் கால்களில் வீழ்ந்து கிடந்து தமிழ்நாட்டின் உரிமைகளை அவர் அடகு வைத்ததைதான் நம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தனி நபர்கள் காலில் விழுவதையே நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

**தமிழர்களுக்கு செய்த துரோகம்!**

தமிழ்நாட்டின் உரிமைகளையே மோடியின் காலடியில் போட அவர்கள் துணிந்ததுதான் அவர்கள் செய்த மன்னிக்க முடியாத துரோகம். ஒட்டு மொத்த தமிழர்களுக்கு செய்த துரோகம்.

இந்த சூழ்நிலையில்தான் நல்வாய்ப்பாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தது, தமிழ்நாடும் பிழைத்தது. இதுவே அ.தி.மு.க. ஆட்சி தொடர்ந்திருந்தால், இந்நேரம் இந்த மாநாட்டிற்கு ‘இது தமிழ்நாடு’ என்ற கெத்தான தலைப்பு இருந்திருக்காது. தமிழ்நாடு என்று மீண்டும் பெயரை மாற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுக்கும் மாநாடாக இருந்திருக்கும்.

இதை தமிழ்நாடு என்று சொல்லக் கூடாது என்று ஒருவர் சொன்னார். அதுவும் சட்டசபைக்கு உள்ளேயே வந்து அவருடைய எஜமானர்களுக்கு விசுவாசத்தைக் காட்டுவதாக நினைத்து நம்முடைய சட்டமன்ற மாண்பை, மாநிலத்தின் அடையாளத்தை சிதைக்க நினைத்தார்.

தமிழ்நாடு அரசு எழுதித் தந்த உரையினைப் படிக்காமல், அவருடைய இஷ்டத்துக்கு படித்தார் ஆளுநர். அதில் இருந்த தந்தை பெரியார், அம்பேத்கர், அண்ணா, காமராசருடைய பெயர்களைக் கூட ஆளுநர் உச்சரிக்காமல் தவிர்த்தார்.

**சுயமரியாதை உணர்வு!**

இதனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கோபத்தின் உச்சிக்கே சென்றார். ஆளுநர் படித்த உரை அவைக் குறிப்பிலே இடம் பெறாது, தமிழ்நாடு அரசு கொடுத்த உரைதான் அவைக் குறிப்பிலே இடம்பெறும் என்று சொன்னார். இதை கோபம் என்று சொல்வதை விட, அதற்கு பெயர் சுயமரியாதை உணர்வு என்பது பொருத்தமானது.

இதைத்தான் அண்ணா அன்றே சொன்னார், “தமிழ்நாடு என்ற பெயரை யார் மாற்ற நினைத்தாலும் அவர்களுக்குள் ஓர் அச்சம் பிறக்கும். அந்த அச்சம் இருக்கிறவரை தமிழ்நாட்டை இந்த அண்ணாதுரைதான் ஆளுகிறான் என்று பொருள்” என்று சொன்னார். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உருவில் இன்றைக்கும் அண்ணாதுரைதான் தமிழ்நாட்டை ஆளுகிறார்.

இந்த சுய மரியாதை உணர்வை மாநில உரிமை எண்ணத்தையெல்லாம் நமக்கு ஊட்டிய தலைவர்தான் தந்தை பெரியார்.

தந்தை பெரியாரை தமிழ்நாட்டு மக்கள் மிகச் சரியாகவே புரிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால், நம்முடைய எதிரிகள்தான் தந்தை பெரியாரை சரியாகப் புரிந்துகொள்ளாமல், அவர் ஏதோ கடவுள் இல்லை என்று சொன்ன தலைவர் என்று மட்டுமே மீண்டும் மீண்டும் பேசுகிறார்கள்.

**தந்தை பெரியார் ஒரு சகாப்தம்!**

தமிழ்நாட்டிற்கும் பிற மாநிலங்களுக்கும் அரசியல் அடிப்படையிலும்

தொடர்ச்சி 4ஆம் பக்கம்